# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.611/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிச்சைபாண்டியன் | த–பெ | மொக்கசாமி |
| ஊர்: | : | தேனி | சமயம்: | |
| வயது: | : | 62/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | தேனி |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை.**

------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வில் இருந்து வருகிறேன். இதற்கு முன்னால் காரைக்குடி வடக்கு காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது வடக்கு காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முத்துக்கிருஷ்ணன் என்பவரால் பதிவு செய்த நிலைய குற்ற எண் 524/2016 இதச பிரிவு 392 வழக்கினை மேல் விசாரணைக்காக எனக்கு கொடுத்ததை அன்றையதினம் 23.45 மணிக்கு பெற்று சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திக் மற்றும் முத்து என்பவர்கள் முன்பாக பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 ஆகும்.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மேல் விசாரணைக்காக ஆய்வாளர் திரு.முருகன் என்பவர் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை** - இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.17 19:00:36 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி